செ.வெ.எண்:03 நாள்:03.06.2020

# பத்திரிக்கை செய்தி

2019-2020-ம் ஆண்டு கலை பண்பாட்டுத் துறை மானியக் கோரிக்கையின் போது மாண்புமிகு தமிழ் ஆட்சிமொழி மற்றும் தமிழ் பண்பாட்டுத்துறை அமைச்சர் அவர்களால் பின்வரும் அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது.

தொன்மை சிறப்புமிக்க தமிழக கிராமியக் கலைகளைப் போற்றி வளர்க்கும் கலைஞர்களையும், கலைக்குழுக்களையும் ஊக்குவிக்கும் வகையில், இசைக் கருவிகள், ஆடை மற்றும் அணிகலன்கள் வாங்கிட தனிப்பட்ட கலைஞர் ஒவ்வொருவருக்கும் ரூ.5000/- வீதம் 500 கலைஞர்களுக்கு ரூ.25,00 இலட்சமும், கலைக்குழு ஒவ்வொன்றுக்கும் ரூ.10000/- வீதம் 100 கலைக்குழுக்களுக்கு ரூ.10.00 இலட்சமும், தமிழ்நாடு இயல், இசை, நாடக மன்றம் மூலம் நிதியுதவி வழங்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

**விண்ணப்பிப்பதற்கான தகுதிகள் விவரம்**

1. தனிப்பட்ட கலைஞரின் வயது 31.03.2020 தேதியில் 16 வயது நிரம்பியவராகவும், 30 வயதுக்குட்பட்டவராகவும் இருத்தல் வேண்டும்.
2. கலைக்குழுக்கள் தங்களது கலை நிறுவனத்தை பதிவு செய்திருத்தல் வேண்டும்.

**உறுப்பினர் - செயலாளர்,**
**தமிழ்நாடு இயல் இசை நாடக மன்றம்,**
**31, பொன்னி, பி.எஸ்.குமாரசாமி ராஜா சாலை,**
**சென்னை - 600 028. தொ.பே.044-2493 7471.**

விண்ணப்பப் படிவங்கள் இலவசமாக வழங்கப்படுகின்றது. தபால் மூலம் விண்ணப்பம் பெற விரும்பும் கலைஞர்கள்/ கலைக்குழுக்கள் சுயமுகவரியிட்ட உறையில் ரூ.10/- க்கான தபால் தலை ஒட்டி மன்றத்திற்கு அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம். மேலும் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்கள் 30.06.2020 செவ்வாய்கிழமை மாலை 5.45 மணிக்குள் அல்லது அதற்கு முன்னரோ மன்றத்திற்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும். விண்ணப்பங்களை நேரிலும் அளிக்கலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், விழுப்புரம்.